09.06.2025

O.S.No.107/2010

வா.சா.1.திரு.சின்னபிடாரன் என்ற கண்ணன் த.பெ. பெரியபிடாரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை முடிவடைந்ததாக தெரிவித்தார்.

**13 முதல் 18 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு** விசாரணை

நானும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதாரம் உள்ளது. ஆதாரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பாட்டனார் சின்ன இளங்கான் என்பவருடன் பிறந்தவர் தான் குலாமுஞ்சி வீரணன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் 1 ம் ஐட்ட சொத்து 4 ஏக்கர் 8 செண்ட் ஆகும். ஆரம்பத்தில் சர்வே எண். 8/2 ஆக இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் பழைய சர்வே எண். 366 ஆகும். வழக்குரையில் 8/2ஏ, 8/2பி, 8/2சி, 8/2இ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் 1 ம் ஐட்ட சொத்து எனக்கு வரவேண்டிய 1 ஏக்கர் 2 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1 ஏக்கர் 22 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன்.

2. வழக்குரையில் 30 வருடங்களுக்கு முன்பு வாய்கராராக ஆளுக்கு ஒரு பகுதியாக முறைபடி அளவை செய்து பங்கீடு செய்யாமல் மேல்புறம் எனக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30 வருடங்களுக்கு முன்பாக சொல்லியது சம்மந்தமாக எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதி என்று சொல்லவில்லை என்றால் சரிதான். யாரை வைத்து வாய்கராராக பாக பிரிவினை செய்தோம் என்றால் 4, 5, 6, 7, 8 பிரதிவாதிகளின் தாயாரான பெரிய பிடாரி என்பவர் தான் பிரித்து கொடுத்தார். நாங்கள் இல்லாமல் எங்கள் பங்கை பெரிய பிடாரிதான் பிரித்து கொடுத்தார். வாய்கிராராக பிரித்த பின்பு உடனடியாக பட்டா கேட்டு வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வழக்குரையில் சொன்னது போன்று வாய்கிராலாக எந்த ஒரு பாகபிரிவினையும் நடைபெறவில்லை என்றும் அதனால் நான் வட்டாட்சியரிடம் பட்டா கேட்டு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தில் பெறுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் 3 வது நபராக பெரியஇளங்கான் த/பெ. பிடாரன் என குறிப்பிடப்பட்டு பின்னர் பெரியபிடாரன் த/பெ. பெரிய இளங்கான் என திருத்தப்பட்டுள்ளது என்றால் அடித்து எழுதப்பட்டுள்ளது. அடித்து எழுதப்பட்டது சம்மந்தமாக கையெழுத்து எதுவும் செய்யப்படவில்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள ஒப்புகை அட்டையில் பெரிய இளங்கான் த/பெ. பிடாரன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3

ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோது அவருக்கு அறிவிப்பு அனுப்பியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ 4 ஆவணத்தில் 3 வதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டாவில் 7/2ஏ ல் குறிப்பிடப்பட்டுள்ள 20.00 ஏர் மற்றும் 7/2 பில் குறிப்பிடப்பட்டுள்ள 32.50 ஏர் ஆகியவை பொறுத்து எனது பெயரில் மட்டும் தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 1 வது ஐட்ட சொத்திற்கும் எனது பெயரில் பட்டா உள்ள 7/2ஏ, 7/2பி சொத்திற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் முதலாவதாக உள்ள பட்டா எண்.535 ல் 8/2சி, 8/2டி, 8/2இ, 8/2எப், 8/2ஜி ஆகிய சொத்துகளை பற்றி பெரிய இளங்கான் மகன் பெரிய பிடாரி என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 பட்டாகளுக்கும், எனக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. கொடிமுஞ்சிவீரணன் என்பவருக்கு பெரியபிடாரன், சின்ன பிடாரன், பெரிய இளங்கான் என 3 மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அதில் பெரியபிடாரன், சின்னபிடாரன் ஆகியோர்களுக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். அவர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பெரிய இளங்கான் என்பவருக்கு பெரிய பிடாரன் என்ற மகனும், பெரிய பிடாரி என்ற மகளும் உள்ளனர் என்றால் இல்லை. பெரிய இளங்கான் என்பவரது மகன் தான் இந்த வழக்கின் 3 ம் பிரதிவாதியான பெரிய பிடாரன் என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்தான 1 வது ஐட்ட சொத்தை பொறுத்து பெரிய இளங்கான், பெரியபிடாரன், சின்னபிடாரன் ஆகிய மூவர் பெயரில் மதுரை வடக்கு தாலுகா வட்டாட்சியரால் பட்டா எண். 17 வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**